**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 14.10.2025</u>**

**OS.110/2022**

**வா.சா.2 திரு. குமார்**
**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**
**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) இந்த வழக்கு எதற்காக போட்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், வசந்தியிடம் அருண்குமார் பணம் வாங்கியதற்காக வழக்கு போட்டுள்ளார்கள். நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை ஏதாவது வந்ததா என்றால் இல்லை. வசந்தி அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வசந்தியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அருண்குமாரை எனக்கு தெரியுமா என்றால் அவரையும் தெரியும். மேற்படி இருவரில் யாராவது ஒருவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை.

2) வசந்தி, அருண்குமாருக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்று சொல்ல முடியுமா என்றால் முடியும் ரூ.2,00,000 கொடுத்தார். அந்த பணம் எதற்காக வசந்தி, அருண்குமாரிடம் கொடுத்தார் என்று சொல்லமுடியுமா என்றால் கடன் கேட்டார் அதற்காக கொடுத்தார். வசந்தி ஏலச்சீட்டு நடத்தினார் என்றும், அதற்காக அருண்குமார் பணம் கேட்டார் என்றும் சொல்லப்படுவது உண்மையா என்றால் அப்படி எதுவும் இல்லை.

3) பணம் வசந்தி கொடுத்ததற்கு ஈடாக என்ன வாங்கினார் என்றால் பாண்டு வாங்கினார். அந்த பாண்டு எங்கு வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் எங்கு வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை,

ஆனால் அருண்குமாரே பாண்டு எடுத்து வந்தார். அந்த பாண்டு எழுதப்பட்டது எந்த இடத்தில் என்றால் வசந்தியின் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. பாண்டு எழுதப்பட்ட போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 5 பேர் இருந்தார்கள். வசந்தி, அருண்குமார் தவிர்த்து 5 பேரா என்றால் இல்லை, அனைவரும் சேர்த்து தான் 5 பேர். பாண்டு யார் எழுதியது என்றால் கௌரி என்பவர் எழுதினார். கௌரி பத்திரம் எழுதுபவரா என்றால் இல்லை. கௌரி இல்லாமல் யார் யார் இருந்தார்கள் என்றால் நான், வசந்தி, அருண்குமார், அசோக் ஆகியோர் இருந்தோம்.

4) அசோக் என்பவர் யார் என்றால் அருண்குமாரின் நண்பர். அந்த பாண்டில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் நானும், அசோக்குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பணம் இரண்டு இலட்சம் ரொக்கமாக கையில் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். புரோநோட் வாங்கியது எல்லாம் உண்மை தான் ஆனால் அருண்குமார் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார், நான் வசந்தி கேட்டதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.14 17:02:47 +0530